Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 63 · வெள்ளிக்கிழமை Friday · 02.01.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

## அரசு ஊழியர், ஓய்வூதியர்களுக்கு பொங்கல் போனஸ் அறிவிப்பு

## ரூ.183 கோடி ஒதுக்கி முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவு





சென்னை: அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு மிகை ஊதியம் (போனஸ்) மற்றும் பொங்கல் பரிசு வழங்க ரூ.183.86 கோடி நிதி ஒதுக்கி முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். அதன்படி, 'சி', 'டி' பிரிவை சார்ந்த பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ரூ.3,000 என்ற உச்சவரம்புக்கு உட்பட்டு மிகை ஊதியம் வழங்கப்படும்.

இது தொடர்பாக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது: "தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், இந்தியாவுக்கே வழிகாட்டக்கூடிய வகையில், பள்ளிக்கல்வி தொடங்கி உயர்கல்வி வரை, வேளாண் வளர்ச்சி முதல் தொழில்துறை வளர்ச்சி வரை, பள்ளி சிறார்களுக்கு காலை உணவு தொடங்கி, அவர்தம் ஆற்றலையும் அறிவினையும் பெருக்கிட நான் முதல்வன் வரை, மகளிருக்கு உரிமைத்தொகை தொடங்கி, மாணவக் கண்மணிகளுக்குத் புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் வரை துறைதோறும் பல முன்னோடி திட்டங்களை, எல்லார்க்கும் எல்லாம் என்ற அடிப்படையில் தீட்டிச் செயல்படுத்தி வருகிறார்.

நாடுபோற்றும் இத்திட்டங்களை கடைக்கோடி மக்களுக்கும் கொண்டு சேர்த்திட அயராது பணியாற்றிவரும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்பஓய்வூதியதாரர்கள், தமிழர் திருநாளாம் பொங்கல் திருவிழாவினை எழுச்சியோடு கொண்டாடி மகிழ 2024–2025 ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம் மற்றும் பொங்கல் பரிசு வழங்கிட 183 கோடியே 86 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து உத்தரவிட்டுள்ளார். இதன்படி சுமார் 9 இலட்சத்து 90 ஆயிரம் பேர் பயனடைவார்கள். இந்த உத்தரவின்படி,

1. 'சி' மற்றும் 'டி' பிரிவைச் (C & D Group) சார்ந்த பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ரூபாய் 3,000 என்ற உச்சவரம்பிற்குட்பட்டு மிகை ஊதியம் வழங்கப்படும்.

2. தொகுப்பூதியம், சிறப்புகால முறை ஊதியம் பெறும் பணியாளர்கள் மற்றும் 2024–2025 ஆம் நிதியாண்டில் குறைந்தபட்சம் 240 நாட்கள் அல்லது அதற்கு மேலாகப் பணிபுரிந்து சில்லரைச் செலவினத்தின் கீழ் மாத அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியம் பெறும் முழுநேர மற்றும் பகுதி நேரப் பணியாளர்கள் ஆகியோருக்கு ரூபாய் 1,000 சிறப்பு மிகை ஊதியம் வழங்கப்படும்

3. "சி" மற்றும் "டி" பிரிவைச் சார்ந்த ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள், முன்னாள் கிராம பணியமைப்பு (முன்னாள் கிராம அலுவலர்கள், கிராம உதவியாளர்கள்) மற்றும் அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள் ஆகியோருக்கு ரூபாய் 1,000 பொங்கல் பரிசாக வழங்கப்படும்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சட்டப்பேரவைத் தேர்தல்களில் அதிமுக சார்பில் போட்டியிட 10,175 பேர் விருப்ப மனு



சென்னை: தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா சட்டப்பேரவைத் தேர்தல்களில் அதிமுக சார்பில் போட்டியிட விருப்பம் தெரிவித்து 7,988 பேர் விருப்ப மனுக்களைப் பெற்றுள்ளதாகவும், தங்கள் தொகுதியில் எடப்பாடி பழனிசாமி போட்டியிட 2,187 பேர் விருப்ப மனுக்களை பெற்றுள்ளதாகவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அதிமுக வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாடு சட்டமன்றப்பொதுத் தேர்தல், புதுச்சேரி மற்றும் கேரள மாநில சட்டமன்றப் பொதுத்தேர்தல்கள் விரைவில் நடைபெற உள்ளதை முன்னிட்டு, அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்நாடு முன்னாள் முதல்வருமான எடப்பாடி பழனிசாமி, அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வேட்பாளர்களாகப் போட்டியிட விரும்பும் கட்சியினர் தங்களுடைய விருப்ப மனுக்களை, சென்னை, ராயப்பேட்டை, அவ்வை சண்முகம் சாலையில் உள்ள தலைமைக் கழக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மாளிகையில், 15.12.2025 முதல் 23.12.2025 வரையிலும், மற்றும் 28.12.2025 முதல் 31.12.2025 வரையிலும் வழங்கலாம் என அறிவிப்பு வெளியிட்டிருந்தார்.

அந்த அறிவிப்பின் பேரில், ஏராளமானோர் விருப்ப மனுக்களை வழங்கி உள்ளனர். அதன்படி, எடப்பாடி பழனிசாமி, 'தங்களது தொகுதிகளில் போட்டியிட வேண்டும் என்று விருப்பம் தெரிவித்து 2,187 விருப்ப மனுக்களும், கட்சி நிர்வாகிகள் மற்றும் கட்சியினர் 'தங்களுக்கு போட்டியிட வாய்ப்பு வேண்டி', தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் கேரளா உட்பட 7,988 விருப்பமனுக்களும், ஆக மொத்தம் 10,175 விருப்ப மனுக்கள் பெறப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இந்த ஆண்டு நடைபெறும் சட்டப்பேரவை தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதில் அதிமுக தீவிரமாக உள்ளது. பாஜகவுடன் கூட்டணி அமைத்தாலும், தனித்து ஆட்சி என்பதிலும் உறுதியாக உள்ளது.

இந்நிலையில், கடந்த டிச.15 முதல், சென்னையில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் விருப்ப மனுக்கள் விநியோகிக்கப்பட்டு வந்தது. அந்த மனுக்களில் 25 கேள்விகள் கேட்கப்பட்டிருந்தன. பொது மற்றும் தனித்தொகுதிகள் அனைத்துக்கும் ரூ. 15 ஆயிரம் செலுத்தி மனுக்கள் பெறப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

## புத்தாண்டில் குறைந்த தங்கம் விலையும், வெள்ளி விலையும்...



இந்த ஆண்டின் தொடக்க நாளில் சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ. 320 குறைந்துள்ளது. தங்கத்தின் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்து வருகிறது.

ஒரு சவரன்(22 காரட்) தங்கம் ஒரு லட்சம் ரூபாயைத் தாண்டி விற்பனையான நிலையில் (டிச. 31) தங்கத்தின் விலைஅதிரடியாகரூ.960 குறைந்தது. நேற்று மாலை நிலவரப்படி ஒரு சவரன் ரூ. 99,840–க்கும் ஒரு கிராம் ரூ. 12,480–க்கும் விற்பனையானது. (ஜன. 1, 2026) புத்தாண்டு நாளில் தங்கத்தின் விலை குறைந்துள்ளது.

தங்கம் விலை சவரனுக்கு ரூ. 320 குறைந்து ரூ. 99,520–க்கும் ஒரு கிராம் ரூ. 40 குறைந்து ரூ. 12,440–க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலை கிராமுக்கு ரூ. 1 குறைந்து ரூ. 256–க்கும் ஒரு கிலோ கட்டிவெள்ளிரூ.2,56,000–க்கும் விற்பனையாகிறது.

தங்கம், வெள்ளி விலை சற்று குறைந்துள்ளது மக்கள் மத்தியில் சற்று ஆறுதலை ஏற்படுத்தியுள்ளது.

தங்க நகைக் கடனை ஊக்குவிக்கும் நடவடிக்கையை ஆர்பிஐ மேற்கொண்டது.

தங்க நகைக்கு அதன் மதிப்பில் 75 சதவீதம் வரை கடனாக வழங்கப்பட்டுவந்த நிலையில், தற்போது ரூ. 2.5 லட்சம் வரையிலான நகைக்கடனுக்கு மட்டும் தங்கத்தின் மதிப்பில் 85 சதவீதம் வரை கடன் அளிக்கப்படுகிறது.

ஒரு நபருக்கு ஒருமுறை மட்டுமே இந்த 85 சதவீத மதிப்பில் கடன் வழங்கப்படும் என்று ஆர்பிஐ அறிவித்தது. இந்த அறிவிப்பு நடுத்தர வகுப்பு மக்களுக்கு பயனுள்ளதாகவே பார்க்கப்படுகிறது. வங்கிசாரா நிதி நிறுவனங்கள், சிறிய வங்கிகள் தங்கநகையின் மதிப்பில் 88 சதவீதம் அளவுக்கு கடன் வழங்குகின்றன.

## வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் அடுத்த 2 நாட்கள் மழை பெய்ய வாய்ப்பு



புத்தாண்டு கொண்டாட்டத்துக்கு இடையே நேற்று முந்தினம் இரவு சென்னை, புறநகர் பகுதியில் பரவலாக திடீர் மழை பெய்தது. இதனால் மெரினா கடற்கரையில் புத்தாண்டு கொண்டாடிய மக்கள் மழையில் நனைந்தவாறு கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், சென்னை உள்பட தமிழகத்தில் சில பகுதிகளுக்கும் அடுத்த இரு நாட்களுக்கு மழை வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது. இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

லட்சதீவு – குமரிக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இலங்கை கடலோரப் பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக நாளை (ஜன.2), நாளை மறுதினம் தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். 4 முதல் 6–ம் தேதி வரை தமிழகம், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். 7–ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் 3 முதல் 5–ம் தேதி வரை ஓரிரு இடங்களில் குறைந்தபட்ச வெப்பநிலை (குளிர்) வழக்கத்தை விட 3 டிகிரி செல்சியஸ் வரை குறைவாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலைவேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்யக்கூடும். அதிகபட்சமாக, சென்னை பெரம்பூரில் 11 செமீ, எண்ணூரில் 10 செமீ, கத்திவாக்கத்தில் 7 செமீ, விம்கோ நகர், திண்டுக்கல்லில் தலா 6 செமீ, செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம், சென்னை மதுரவாயல், அயனாவரம், அண்ணாநகர் மேற்கு, மணலி, கரூர் பரமத்தி, திருவள்ளூர் மாவட்டம் செங்குன்றம் ஆகிய இடங்களில் தலா 5 செமீ மழை பதிவாகியுள்ளது.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**செய்திகள்**
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் சட்டமன்ற தொகுதி பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக புத்தாண்டு தினத்தை முன்னிட்டு ஆலங்குளம் காமராஜர் சிலைக்கு தென்காசி மாவட்ட கல்வியாளர் பிரிவு தலைவர் அருணாசலம் அவர்கள் தலைமையில், ஆலங்குளம் தெற்கு ஒன்றிய முன்னாள் தலைவர் பண்டரிநாதன், கடையம் கிழக்கு ஒன்றிய தலைவர் வைகுண்ட ராஜா ஆகியோர் முன்னிலையில் ஆலங்குளம் பெருந்தலைவர் காமராஜர் சிலைக்குமாலைஅணிவித்துமரியாதைசெலுத்திசெலுத்தி,பொதுமக்களுக்குஇனிப்புகள் வழங்கி , பட்டாசுகள் வெடித்து சிறப்பாக கொண்டாடப்பட்டது.

நிகழ்ச்சியில் கீழப்பாவூர் கிழக்கு ஒன்றிய முன்னாள் தலைவர் மாறவர்மன், மகளீர் அணி மாவட்ட செயலாளர் நவரத்தினம் , இளைஞரணி மாவட்ட பொதுச் செயலாளர் சரவணன், இளைஞரணி மாவட்ட செயலாளர் செல்வம், ஆலங்குளம் ஒன்றிய விவசாய அணி தலைவர் சண்முகம், கடையம் கிழக்கு ஒன்றிய பொருளாளர் கொடியரசன், கீழப்பாவூர் ஜோதி செல்வம் ஆறுமுகம், பாஸ்கர், ஆலங்குளம் நிகிலன், சிவா, வினோத் குமார், மாறாந்தை வெங்கடேஷ், சோலைசேரி கயல் மணிகண்டன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அச்சிறுப்பாக்கத்தில் ஸ்ரீ ஐயப்பன் கோவிலில் 54ம் ஆண்டு படி பூஜை விழா



செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கத்தில் தேசிய நெடுஞ்சாலை அருகே அமைந்துள்ள ஸ்ரீ ஐயப்பன் ஆலயம் உள்ளது இந்த ஆலயத்தில் 54ம் ஆண்டு படி பூஜை விழா ஆண்டுதோறும் ஜனவரி ஒன்றாம் ஸ்ரீ ஐயப்பனுக்கு பதினாறு வகையான அபிஷேக பொருட்களைக் கொண்டு சிறப்பு அபிஷேகம் செய்து 18 படிகளுக்கு பூஜை செய்து தீப ஆராதனைகள் காண்பிக்கப்பட்டதுபின்பு ஐயப்பன் அலங்கரிக்கப்பட்ட தேர் வீதி உலா அச்சிறுப்பாக்கம் முக்கிய வீதியில் வழியாக வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தார் இதில் கலந்து கொண்ட ஐயப்ப பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியினை ஸ்ரீ ஐயப்பா அறக்கட்டளை குருசாமிகள் S.ஆனந்தன் S.குமார், p. முருகபிரான் AV.கங்காதரன், P.பொன்னுரங்கம், மற்றும் நிர்வாகிகள் V.கண்ணன் AE. முருகதாஸ் AK.ஆனந்தன், M.ஜெயக்குமார், C.ரமேஷ் D.மணிகண்டன்

சரவணன் M.வினோதன் M.வேலு ,மற்றும் ஐயப்பா அறக்கட்டளை நிர்வாகிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# மதுராந்தகம் அருகே செயின்ட் பீட்டர்ஸ் சர்ச் சார்பில் ஆங்கில புத்தாண்டு ஜெபக்கூட்டம் நடந்தது



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட அச்சிறுபாக்கம் ஒன்றியத்தில் உள்ள தீட்டாலம் ஊராட்சியில் அமைந்துள்ள. புனித செயின்ட் பீட்டர்ஸ் சர்ச் சார்பில் 2026 ஆங்கில புத்தாண்டு தினத்தை முன்னிட்டு இரவு 12 மணி அளவில் இறைவனின் பெயர் சூட்டிய நாளே புத்தாண்டு மக்களின் மகிழ்ச்சியே புத்தாண்டு அன்பின் அடையாளமே புத்தாண்டு இரக்கத்தின் பரிவே புத்தாண்டு பரிசுத்தத்தின் ஒழுக்கமே புத்தாண்டு அன்பு அமைதி மகிழ்ச்சி பொறுமை பரிவு நன்னயம் நம்பிக்கை கனிவு தன்னடக்கம் இவைகளைப் பின்பற்றி உலக மக்கள் வளத்துடனும் செழிப்புடனும் வாழ இறைவன் இயேசுவின் அருளால் இம்மக்கள் அனைவரும் பரிசுத்தமாய் வாழ வேண்டி சிறப்பு பிரார்த்தனை நடைபெற்றது

இநிகழ்ச்சியில் சிஎஸ்ஐசென்னைபேராயம் உத்திரமேரூர் குருசேகரம் தலைவர் அருட்திருசுகிர்தராஜ்குருசேகர ஆயர்அருட்திருஆலிசன் ஜெபக்குமார் குருசேகர செயலர் திரு பக்தன் அருள்ராஜ் குருசேகர பொருளாளர் திரு அப்புன்ராஜ் திருச்சபை ஊழியர் திருமதி பெர்ட்டிஷியா சபை மூப்பர் திருமதி சுலேக்ஷனா கமிட்டி உறுப்பினர்கள் விக்டர், சகரியா மற்றும் நவமணி உள்ளிட்ட சபை மக்கள் ஏராளமானோர் கலந்துகொண்டு அருள் ஆசி பெற்றனர்



சேலம் மாவட்டம் இடங்கணசாலை நகராட்சி கூட்டத்தில், பாமக கவுன்சிலர்கள் மணி, மூர்த்தி, ராஜேந்திரன், மகாலிங்கம், அமுதா, சரஸ்வதி ஆகியோர் பாய், தலையணையுடன், நெற்றியில் நாமம் போட்டுக் கொண்டு நகராட்சி தலைவர் மேஜையின் முன்பு அமர்ந்து போராட்டம் நடத்தினர். தங்கள் வார்டு பகுதிக்கு குடிநீர், தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரப்படுவதில்லை என்றும், சாலைகள் தரமற்றதாக இருப்பதாகவும் அவர்கள் குற்றம் சாட்டினர். இது தொடர்பாக நகராட்சி தலைவருடன் வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர்.





# தென்காசி புனித மிக்கேல் அதிதூதர் திருத்தலத்தில் புத்தாண்டு நள்ளிரவு சிறப்பு திருப்பலி

தென்காசி மாவட்டத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற புனித மிக்கேல் அதிதூதர்திருத்தலத்தில் புத்தாண்டு சிறப்பு திருப்பலி மிகவும் சிறப்பாக நடைபெற்றது -தொடக்கமாக கடந்தாண்டு முழுவதும் இறைவன் செய்த அனைத்து நன்மைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக நன்றி வழிபாடும், அதன் பின்னர் . தமிழகத்தின் பண்பாட்டையும் கலாசாரத்தையும் போற்றும் வகையில் பங்குத் தந்தை, அருட்சகோதரி, பொது நிலையினர் பங்கேற்ற குத்து விளக்கு ஏற்றும் நிகழ்வு நடைபெற்றது.

அதனை தொடர்ந்து புத்தாண்டு நள்ளிரவு சிறப்பு திருப்பலியினை பாளையங்கோட்டை மறைமாவட்ட அலுவலக செயலர் அருட்பணி. D. சேவியர் அடிகளார் தலைமையேற்று வழி நடத்தினார். அவருடன் இணைந்து தென்காசி புனித மிக்கேல் அதிதூதர் திருத்தலத்தின் பங்குத்தந்தை அருட்பணி. ஜேம்ஸ்அடிகளார்"இதோ உன் தாய்" என்ற மையச் சிந்தனையில் மறையுரை ஆற்றினார். மேலும் தென்காசி பங்கின் உதவிப்பங்குத்தந்தைஅருட்பணி. ஜியோ சந்தனம் அடிகளார், யோசேப்புக்கு அற்பனமானவர் சபையின் குருமட அருட்தந்தையர்கள் சேவியர், ஜாய் ஆகியோரும் இணைந்து திருப்பலியினை வழிநடத்தினர்.

இந்த புத்தாண்டு சிறப்பு திருப்பலியினை பங்கு பேரவையினர் சிறப்பு செய்தனர். இந்நிகழ்சியில் அமலவை அருட்சகோதரிகள், பங்கு பேரவையினர், செங்கோல் நகர், சுந்தர பாண்டியபுரம், குற்றாலம் குடியிருப்பு,

இலத்தூர் , குத்துக்கல்வலசை, மத்தளம்பாறை மற்றும் தென்காசி சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து திரளான இறைமக்கள் கலந்து கொண்டனர். திருப்பலியின் நிறைவில் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள் தெரிவித்து திருத்தல நிர்வாகத்தின் சார்பில் கேக் வழங்கப்பட்டது.

வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள்
கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா
திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள்
ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன்
வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல்

தொடர்புக்கு : ☎ +919444082959

# கோவிலில் பணம் திருடிய வாலிபர் கைது



கள்ளக்குறிச்சி மாவட்டம் வாணாபுரம் தாலுக்கா ராவத்தநல்லூர் கிராமத்தில் உள்ள பிரசித்தி பெற்ற லட்சுமி குபேரர் கோவிலில் உள்ள கருவறையில் இருந்த 2300 ரூபாய் ரொக்கமும் உடன் இருந்த 20 கிராம் வெள்ளி காயினை திருடி சென்ற புதுக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த தனபால் மகன் சக்தி என்கிற குற்றவாளியை வட பொன்பரப்பி காவல் நிலைய ஆய்வாளர் விவேகானந்தா அவர்கள் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகிறார்.

மேலும் இந்த திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டிருந்த ரங்கப்பனூர் கிராமத்தைச் சேர்ந்த பாபா என்பவர் தப்பி ஓட்டம் தப்பி ஓடிய குற்றவாளியை போலீசார் வலை வீசி தேடி வருகின்றனர்

# தூத்துக்குடி சாலை பகுதிகளில் மாடுகள் திரிந்தால் மாடுகள் உரிமையாளருக்கு திரும்ப வழங்கப்பட மாட்டாது

## மேயர் ஜெகன் பெரியசாமி அறிவிப்பு



தூத்துக்குடி மாநகராட்சி மாதாந்திர சாதாரண கூட்டம் கூட்டரங்கில் மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் ஆணையர் ப்ரியங்கா, துணை மேயர் ஜெனிட்டா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பின்னர், மேயர் ஜெகன் பெரியசாமி பேசுகையில்: தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் உத்தரவிற்கிணங்க மாநகராட்சி பகுதியில் அனைத்து பணிகளும் நல்லமுறையில் நடைபெற்று வருகின்றன. மழைக்காலத்தில் மழை நீர் 16 17 2 ஆகிய 3 வார்டுகளில் தவிர மற்ற இடங்களில் எங்கும் தேங்காதவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டது. பல்வேறு வழித்தடம் கழிவு நீர் பம்பிங் மூலம் வெளியேற்றப்பட்டுள்ளன. பொங்கல் பண்டிகை முன்னிட்டு பல்வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது முத்துநகர் கடற்கரை பூங்கா. ரோச் பூங்கா. ராஜாஜி பூங்கா எம்ஜிஆர் பூங்கா ஆகிய பூங்காக்கள் பொங்கலுக்கு மறுநாள் பொதுமக்கள் கருநாளன்று பொழுதுபோக்கும் வகையில் பூங்காவிற்கு வருவார்கள் அதன் அடிப்படையில் பூங்கா பராமரிக்கும் பணிகள் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதுபோல பூங்காக்களில் நடைபயிற்சியின் போது உடற்பயிற்சி செய்யும் வகையில் பல பணிகள் நடைபெற்று வருகிறது. டூவிபுரம் சங்கர நாராயணன் பூங்கா உள்ளே நீர் தேக்க தொட்டி உள்ளது அதில் தண்ணீர் தேங்கி சுகாதாரமற்ற முறையில் உள்ளது தற்போது சீரமைப்பு செய்யப்பட்டு மேல்நிலை நீர் தேக்க தொட்டி சுற்றி பொதுமக்கள் நடை பயிற்சி மேற்கொள்ளும் வகையில் பணிகளும் நடைபெற்று வருகிறது. முத்து நகர் கடற்கரையில் பொதுமக்கள் பொழுது போக்கும் வகையில் படகு சவாரி தனியார் ஒப்பந்தத்துடன் நடைபெறவுள்ளது. அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. 147 வருடங்களுக்கு முன்பு உள்ள தெப்பக்குளம் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று சீரமைக்கும் பணி நடைபெற்றது அமோனியா இருப்பதால் அதிலுள்ள மீன்களை அப்புறப்படுத்தி நீரையும் வெளியேற்றிய போது அதில் ஏற்பட்ட சில பிரச்சனைகளால் விரிசல் ஏற்பட்டு பணிகள் மீண்டும் எந்த ஒரு பிரச்சனையும் இல்லாமல் தற்போது இருக்கும் வகையில் பழமை மாறாமல் சீரமைக்கப்பட உள்ளது. பிப்ரவரி 1ம் தேதி தெப்ப திருவிழா நடைபெற உள்ளது அதற்குள் பணிகள் முடிவடைந்தால் பொதுமக்கள் நான்கு புறமும் இருந்து தெப்பத் திருவிழா கண்டுகளிக்கும் வகையில் மக்கள் அனுமதிக்கப்படுவார்கள் பணிகள் முடிவடையாவிட்டால் கீழ்புறமும் மேல் புறமும் என இருபகுதிகளில் மட்டும் பொதுமக்கள் நின்று தெப்ப திருவிழா கண்டு களிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்படும். இப்போது அமைக்கப்படுகின்ற கழிநீர்கால்வாய் வழித்தடங்கள் அனைத்தும் சுகாதாரத்தை பேணி பாதுகாக்கும் வகையில் மூடி போட்டு தான் கால்வாய் அமைக்கப்படுகிறது. மாநகரில் டிஜிட்டல் போர்டுரோட்டில்வைக்க கூடாது என்று கூறினாலும் பல இடங்களில் போர்டுகள் வைக்கப்படுகிறது அது ஒரு சவாலாகவுள்ளது. திருமணம் உள்ளிட்ட சில நிகழ்வுகளுக்கு திருமண மண்டபம் முன்பு சம்பந்தமான டிஜிட்டல் போர்டுகள் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டது ஆனால் பணம் 750 ரூபாய் மாநகராட்சிக்கு செலுத்தி விட்டு சாலைகளில் ஆங்காங்கே டிஜிட்டல் போர்டு வைக்கப்படுகிறது அதனால் பல சமயங்களில் பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பு வருகிறது. ஆகவே மாநகரில் முழுவதுமாக தடை செய்யலாமா என்று ஆணையருடன் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது இல்லை என்றால் குறிப்பிட்ட சில இடங்கள் ஒதுக்கப்பட்டு அந்த இடத்தில் மட்டும் டிஜிட்டல் போர்டு வைக்க அனுமதிக்கலாமா என்றும் ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. அதுபோல மாநகரில் ஆங்காங்கே மாடுகள் சுற்றித் திரிவதால் சில விபத்துகள் ஏற்படுகிறது உயிரிழப்புகளும் ஏற்படுகிறது பிடித்து அபதார தொகை வசூலித்தாலும் மீண்டும் மீண்டும் சாலைகளில் மாடுகள் திரிந்து கொண்டு தான் வருகிறது ஆகையால் ஜனவரி 1ம் தேதி முதல் மாநகர் பகுதிகளில் சாலைகளில் மாடுகள் சுற்றித்திரிந்தால் பறிமுதல் செய்யப்பட்டு சங்கரன்கோவிலில் உள்ள கோசாலைக்கு அனுப்பி வைக்கப்படும் மாடுகளை உரிமையாளருக்கு திரும்ப வழங்கப்பட மாட்டாது. மாநகரில் 1880 லைட்டுகள் புதியதாக மின்கம்பத்தில் பொருத்தப்பட உள்ளது விரைவில் அதற்கான பணிகளும் துவங்க உள்ளது அதுபோல் 3 ஆயிரம் புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. விரைவில் பல விடுபட்ட சாலைகள் அமைக்கும் பணியும் துவங்கப்பட உள்ளது. அதுபோல பாதாள சாக்கடை பணிகள் நமக்கு முக்கியம் அந்த இடங்களில் பாதாள சாக்கடை பணிகள் முடிவடைந்த பகுதிகளில் உடனடியாக சாலைகள் அமைக்கப்பட்டு வருகிறது என்று மேயர் ஜெகன் பெரியசாமி பேசினார். அதை முறைப்படுத்துவதற்கும் வழிவகை செய்யப்படும் தற்போது 53 பூங்காக்கள் பல்வேறு வகையில் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது விரைவில் முதியோர்களுக்கான பூங்காக்கள் பயன்பாட்டிற்கு வரவுள்ளது. மொத்தம் 206 பூங்காக்கள் அடங்கிய மாநகராட்சி பகுதியாக உருவாகும் நிலை இருக்கிறது. மாநகராட்சி பகுதியில் 26 கிலோமீட்டர் தூரத்திற்கு தேசிய நெடுஞ்சாலை இருந்து வருகிறது. அந்த பகுதியிலும் நாம் தான் பல பணிகளை மேற்கொண்டு வருகிறோம் 50வது வார்டு அடங்கிய சில பகுதிகளில் உப்பளமாக இருந்தது தற்போது குடியிருப்பாக மாறி வருவதால் அதற்கேற்றாற்போல் கட்டமைப்பு பணிகளை உருவாக்கி வருகிறோம் மொத்தத்தில் ஒருவாரம் பொறுத்துக்கொள்ளுங்கள் அதன்பின் பணிகள் தொடங்கப்பட்டு முழுமையாக நிறைவு பெறும். அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள் எல்லோருக்கும சிறப்பாக அமையட்டும். என்று வாழ்த்துக்களை கூறி இந்த ஆண்டின் கடைசி கூட்டம் நிறைவு பெற்றது.

கூட்டத்தில் இணை ஆணையர் சரவணக்குமார், மாநகராட்சி பொறியாளர் தமிழ்ச்செல்வன், உதவி பொறியாளர் சரவணன், நகரமைப்புதிட்ட செயற்பொறியாளர் வேலாயுதம், உதவி செயற்பொறியாளர் காந்திமதி, உதவி ஆணையர் வெங்கட்ராமன், சுகாதார ஆய்வாளர் ஸ்டாலின் பாக்கியநாதன், ராஜசேகர், மண்டல தலைவர்கள் வக்கீல் பாலகுருசுவாமி, கலைச்செல்வி, அன்னலெட்சுமி, மாமன்ற உறுப்பினர்கள் கீதாமுருகேசன், அதிஷ்டமணி, சரவணக்குமார், ரெங்கசாமி, பொன்னப்பன், ஜான்சிராணி, சந்திரபோஸ், முத்துவேல், மும்தாஜ், ராமுஅம்மாள், தனலெட்சுமி, முத்துமாரி, விஜயகுமார், கனகராஜ், ஜாக்குலின்ஜெயா, ஆறுமுகம் வைதேகி, மெட்டில்டா, சுப்புலட்சுமி, பாப்பாத்தி, ரெக்ஸ்லின், வக்கீல் வீரபாகு உள்பட மாநகராட்சி அலுவலர்கள், மாமன்ற உறுப்பினர் பலர் கலந்து கொண்டனர்.



# தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கலெக்டர் இளம்பகவத் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அவசர மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவில் மாவட்ட ஆட்சியர்ஆய்வுமேற்கொண்டு, அங்குள்ள மருத்துவ பயனாளிகளிடம் நலம் விசாரித்தார். மேலும் வருகின்ற மருத்துவ பயனாளிகளை தெரிந்துக் கொண்டு, எவ்விதம் தயார் நிலையில் இருப்பீர்கள்? அங்குள்ள கட்டில்கள் மற்றும் விரிப்புகள் முறையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளதா? எப்பொழுது மாற்றம் செய்யப்பட்டது என்பது குறித்து கேட்டறிந்தார்கள். இருதயவியல் பிரிவில் ஆய்வு செய்து, ஆஞ்சியோகிராம் செய்த மருத்துவபயனாளிகளை சந்தித்து உரையாற்றினார்.

பின்னர், துத்துக்குடி அரசு மருத்துவமனையில் இரண்டு கட்டடங்கள் உபயோகமின்றியும் மற்றும் சிதலமடைந்து காணப்பட்ட இரண்டு வார்டுகளையும் பார்வையிட்டு, அதனை இடித்து அகற்றுவதற்கு பொதுப்பணித்துறையினருக்கு ஆலோசனை வழங்கினார். மேலும், பெண்கள் மருத்துவ சிகிச்சை பிரிவு, புற்றுநோய் பிரிவு ஆகியவற்றை ஆய்வு மேற்கொண்டார். அங்குள்ள கட்டிடங்கள் சிறப்பாக பராமரிக்கப்பட வேண்டும் என பொதுப்பணித்துறையினருக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, குழந்தைகள் பிரிவு, மகப்பேறு பிரிவு ஆகியவற்றை ஆய்வு மேற்கொண்டு, மருத்துவ பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய மருத்துவ சிகிச்சைகளை வழங்க ஆலோசனை வழங்கினார். பிஎம்ஜெவிகே திட்டத்தின் கீழ் புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் மாற்றம் செய்யப்படும் மகப்பேறு பிரிவு மற்றும் குழந்தைகள் பிரிவு ஆகிய துறைத் தலைவர்களிடம் மாவட்ட ஆட்சியர் ஆலோசனை நடத்தினார்கள். பொதுப்பணித்துறையினர் அங்கு மேற்கொள்ள வேண்டிய பணிகள் ஆகியவை குறித்து ஆய்வு மேற்கொண்டார். மருத்துவபயனாளிகளை நன்றாக கவனிக்கவும், கட்டிடங்களை சரியான முறையில் பராமரிக்கவும் மருத்துவர்கள் மற்றும் பொதுப்பணித் துறையினருக்கு மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வில் தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, முதல்வர் மரு. சிவக்குமார், உண்டு உறைவிட மருத்துவர் மரு. சைலேஸ் ஜெபமணி, மருத்துவ அலுவலர் மரு. சிவசைலம், பொதுப்பணித்துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் மருத்துவர்கள் உடனிருந்தனர்.




# கோவை காந்திபுரம் பிரீத்தி மருத்துவமனையில் நீரிழிவு நோய்க்கென பிரத்யேக தனி சிகிச்சை பிரிவு துவக்கம்

## முதுகு தண்டுவட முறிவு அறுவை சிகிச்சையில் நவீன முறையில் நோயாளிகள் விரைவில் குணமடைய முடியும் என மருத்துவர் தண்டபாணி தெரிவித்துள்ளார்




கோவை காந்திபுரம் ஒண்பதாவது எக்ஸ்டென்சன் வீதியில் செயல்பட்டு வரும் பிரீத்தி மருத்துவமனையில் கடந்த 12 ஆண்டுகளாக அனைத்து விதமான நோய்களுக்கும் தரமான குறைந்த கட்டணத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.. இந்நிலையில் பிரீத்தி மருத்துவமனையில்நீரிழிவுநோய் சிகிச்சைக்கா ன புதிய மையம் துவங்கப்பட்டுள்ளது..

இது தொடர்பாக நீரிழிவுநோய்சிகிச்சை நிபுணர் மருத்துவர் பிரீத்தி செய்தியாளர்களிடம் பேசினார்..

அப்போது பேசிய அவர்,தற்போது சர்க்கரை நோய் பாதித்த டைப் 1 மற்றும் 2 வகை நோயாளிகள் தொடர்ந்து எடுத்து வரும் இன்சுலின் ஊசிக்கு பதிலாக புதிய (Afreeza) அஃப்ரீசா எனும் இன்ஹேலர் வகை இன்சுலினை பயன்படுத்துவதால் வலியில்லாமல் உடலில்செலுத்திகொள்ள முடியும் என தெரிவித்தார்..

இதனை தொடர்ந்து பிரீத்தி மருத்துவமனையின் நிர்வாக இயக்குனரும் மூட்டு மாற்று அறுவை சிகிச்சை நிபுணருமான மருத்துவர் தண்டபாணி செய்தியாளர்களிடம் பேசுகையில்,தற்போது விபத்து,தடுமாறி கீழே விழுவது போன்ற காரணங்களால் ஏற்படும் முதுகு தண்டுவட முறிவை குணப்படுத்த நவீன வகை அறுவை சிகிச்சைகள் செய்யப்படுவதாக கூறினார்..

டைட்டானியம் வகையிலான ஸ்க்ரூ மற்றும் ராடுகளை இந்த அறுவை சிகிச்சைக்கு பயன்படுத்துவதால் நோயாளிகள் விரைவாக எழுந்து நடக்கும் நிலைக்கு திரும்ப முடியும் என அவர் கூறினார்..

இது போன்ற சிகிச்சை களை வயது முதிர்ந்த வர்களும் மருத்துவர்களின் தகுந்த ஆலோசனை செய்து அறுவை சிகிச்சை செய்து கொள்ளலாம் என தெரிவித்தார்.

# கோவை கவுண்டம்பாளையம் அடுத்த சரவணா நகர் பகுதியில், பெத்லஹேம் ஜாய் எனும் ஜெபவீடு சார்பாக, புத்தாண்டு சிறப்பு ஆராதனை நிகழ்ச்சி நடைபெற்றது; இதில் பல்வேறு சிறப்பு பாடல்கள் பாடினர்




கோவை கவுண்டம்பாளையம் அடுத்த சரவணா நகர் பகுதியில், பெத்லஹேம்ஜாய்எனும் ஜெபவீடு அமைந்துள்ளது. இந்த ஜெபவீட்டின் சார்பாக 2026 புத்தாண்டை வரவேற்கும், சிறப்பு ஆராதனை துதி பாடல் நிகழ்ச்சி நடைபெற்றது..

கோவை கவுண்டம்பாளையம் அடுத்த சரவணா நகர் பகுதியில் உள்ள சாரல் மஹாலில் கோலாகலமாக நடைபெற்ற இந்த புத்தாண்டு விழா நிகழ்ச்சிக்கு, தலைமை போதகர் ஜான் பீட்டர்,தலைமை தாங்கினார். உதவி போதகர் ஜெயக்குமார், தலைமை மூப்பர் சந்திரன், ஆகியோர் முன்னிலையில் சிறப்பு பாடல்கள் படபட்டு 2026ம் ஆண்டை வரவேற்க்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.தொடர்ந்து சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெற்றன. இதில் ஜெப வீட்டின் ஊழியர்கள் கண்ணீர் மல்க பிரார்த்தனை செய்து நள்ளிரவு 12 மணிக்கு ஒருவருக்கு ஒருவர் ஆரத்தழுவி கொண்டு புத்தாண்டு வாழ்த்துக்கள் கூறி கொண்டாடினர். இதனை தொடர்ந்து அனைவருக்கும் இனிப்புகள் வழங்க பட்டது. தொடர்ந்துஅனைவருக்கும் 2026ம் ஆண்டுக்கான நாள் காட்டி வழங்கபட்டது. தொடர்ந்து இரவு 2மணி வரை சிறப்பு விஷேச ஆராதனைகள் நடைபெற்றது. முன்னதாக, புத்தாண்டை வரவேற்கும் விதமாக,பெத்லஹேம் ஜாய் ஜெபவீட்டின் சகோதர சகோதரிகளின் நடன நிகழ்ச்சி, நாடகம், உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் போக்குவரத்து பணியாளர் ராஜேஸ் பிரேம் குமார், அனைத்து சமூக மக்களுக்கும் உதவும் பேரவை அமைப்பின் நிறுவன தலைவரும் வழக்கறிஞரும், சமூக ஆர்வலருமான புஸ்பாணந்தம், ஜெபா, வர்ஷா, வர்ஷினி,மோகன் ராஜா, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக, தேவேந்திர குல வேளாளர் பட்டியல் வெளியேற்றத்தை கண்டித்து

# மத்திய மாநில அரசுகளுக்கு எதிராக கன்டன முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தேவேந்திர குல வேளாளர்கள் மற்றும் நாம் தமிழர் கட்சியினர்




தேவேந்திர குல வேளாளர் பட்டியல் வெளியேற்றம் என்பது, தாங்கள் பட்டியல் சாதியான எஸ்இ, பிரிவில் இருந்து நீக்கப்பட்டு,தங்களின் உண்மையான அடையாளமான தேவேந்திர குல வேளாளர் என்ற பெயரில் தனிப் பிரிவாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என தேவேந்திர குல வேளாளர் சமூகத்தினர் மத்திய மாநில அரசுகளுக்கு பல்வேறு கோரிக்கைகளை விடுத்துள்ளனர். ஆனால் இவர்களின் கோரிக்கைக்கு, மத்திய, மாநில அரசுகள் செவி சாய்க்காமல் காலம் தாழ்த்தி வருகின்றது. இத்னை கன்டித்து, திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு கன்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு தேவேந்திர குல வேளாளர் நல தன்னெமுச்சி இயக்கத்தை சேர்ந்த அந்தியூர் காமராஜ் தலைமை தாங்கி கண்டன உரையாற்றினர். இதில் தேவேந்திர குல வேளாளர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகேசன் வரவேற்புரையாற்றினார்

அப்பொழுது அனைவரது மத்தியிலும் பேசியவர் கூறியதாவது..

எங்களது சமூகம் பட்டியல் பிரிவில் இருப்பதால், தங்களின் பூர்வீகப் பெருமை இழக்கப்படுகிறது எனவும், ஆதி திராவிடர், 'ஹரிஜன்' போன்ற பெயர்களால் அடையாளப்படுத்தப்படுவது அவமானம் என்றும் கருதுவதாக கூறினார். இந்த கோரிக்கையை வலியுறுத்தி, தேவேந்திர குல வேளாளர், மள்ளர் மீட்பு களம் மற்றும் நாம் தமிழர் கட்சி போன்ற அமைப்புகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும், தெரிவித்தார். மேலும் எங்களது கோரிக்கைகளாக

தேவேந்திர குல வேளாளர்களை எஸ்இ பட்டியலில் இருந்து நீக்கவேண்டும்,எனவும், தங்களை 'தேவேந்திர குல வேளாளர்' என்றே அங்கீகரிக்க வேண்டும் எனவும்,

பட்டியல் பிரிவில் இருந்து நீக்கப்படும் பட்சத்தில், தனி இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் எனவும் இதனே மத்திய அரசு மூலம் நிறைவேற்ற வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

தேவேந்திர குல வேளாளர் என்பது பள்ளர், தேவேந்திர குலத்தார், குடும்பர், காலாடி, பண்ணாடி, கடையன், வாதிரியான் போன்ற ஏழு உட்பிரிவுகளின் குடைச்சொல்லாக உள்ளது,

சுதந்திரத்திற்குப் பின், தங்களை பட்டியல் வகுப்பில் சேர்க்கப்பட்டதாகவும்,

ஆனால் பல ஆண்டுகளாக இந்த நிலைப்பாட்டை எதிர்த்துப் போராடி வருகின்றதாகவும் தெரிவித்தனர்.

2010-ம் ஆண்டுமுதல் பல்வேறு மாநாடுகள், போராட்டங்கள், மனுக்கள் மூலம் கோரிக்கை வலுவாக முன்வைக்கப்பட்டு வருகின்றது., மேலும் எங்களுடன்

நாம் தமிழர் கட்சி போன்ற கட்சிகள் இந்தப் போராட்டத்தில்முக்கியப் பங்காற்றுகின்றதாகவும் தெரிவித்தனர்.

சுருக்கமாக, தேவேந்திர குல வேளாளர் பட்டியல் வெளியேற்றக் கோரிக்கை என்பது, இட ஒதுக்கீட்டின் கீழ் உள்ள பட்டியல் சாதிப் பிரிவில் இருந்து விடுபட்டு, வரலாற்றுப் பெருமையுடன் தனி அடையாளத்தைப் பெறுவதற்கான ஒரு சமூகப் போராட்டமாக இந்த போராட்டம் நடத்தி வருவதாக தெரிவித்தனர்.

இந்த ஆர்பாட்டத்தில், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் மாநில துணை தலைவரும், அனைத்து சமூக மக்களுக்கும் உதவும் பேரவை அமைப்பின் நிறுவன தலைவரும், சமூக ஆர்வலருமான வழக்கறிஞர் புஸ்பாணந்தம், பேரூர் தேவேந்திர குல மடாதிபதி ராஜ தேவேந்திர சுவாமிகள், சூலூர் வடிவேலு, டாஸ்மாக் மணிமாறன், குருமிஸ் மஹா சபாவை சேர்ந்த கலை செல்வன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆங்கிலப் புத்தாண்டு: ஈரோட்டில் கேக் வெட்டி உற்சாகமாகப் பணியைத் தொடங்கிய தூய்மைப் பணியாளர்கள்





ஈரோடு மாநகராட்சி இரண்டாம் மண்டலத்திற்குட்பட்ட இடையன்காட்டுவலசு பகுதியில், ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு தூய்மைப் பணியாளர்கள் ஒன்றிணைந்து கேக் வெட்டி உற்சாகமாகக் கொண்டாடினர். இடையன்காட்டுவலசு தூய்மைப் பணியாளர்கள் வார்டு அலுவலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு, சுகாதார அலுவலர் பூபாலன் தலைமை தாங்கினார். சுகாதார ஆய்வாளர் மணிவேல் முன்னிலையில் இந்த விழா நடைபெற்றது. புத்தாண்டில் தங்களது பணிகளை மிகுந்த புத்துணர்வோடும், மகிழ்வோடும் தொடங்கும் நோக்கில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

100-க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்கள் கலந்து கொண்டனர். அனைவரும் ஒன்றிணைந்து கேக் வெட்டி, ஒருவருக்கொருவர் வாழ்த்துகளைப் பரிமாறிக்கொண்டனர். மேலும், தாங்கள் வெட்டிய கேக்கினை அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கும் வழங்கி தங்களது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டனர்.

நகரத்தைச் சுத்தமாக வைக்கும் கடினமான பணியைச் செய்யும் தூய்மைப் பணியாளர்கள், பாகுபாடின்றி ஒன்றிணைந்து புத்தாண்டைக் கொண்டாடிய விதம் அப்பகுதி மக்களிடையே மிகுந்த வரவேற்பையும், நெகிழ்ச்சியையும் ஏற்படுத்தியது.




ஆங்கில புத்தாண்டே வருக ! நலம் எல்லாம் தருக ! என ஆங்கில வருடபிறப்பை பலூன் பறக்க விட்டு,கவிதை பாடி வரவேற்கும் சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளி மாணவிகள்



சேலம் மாவட்டம் தொளசம்பட்டியில் உள்ள பழமை வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ அப்பரமேய பெருமாள் ஆலயத்தில் ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு பெருமாள் சுவமிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை மற்றும் சிறப்பு அலங்காரம் வெகு சிறப்பான முறையில் நடைப்பெற்றது. சுற்றுவட்டார பகுதியில் உள்ள திரளான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.



வரும் 2026 சட்டமன்றத் தேர்தலில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பாக ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை ஒருங்கிணைப்பாளரும் 36 வது வார்டு தலைவருமான ஏ நூருதீன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிட நேற்று 01.01.2026 ஈரோடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அலுவலகமான ஜவஹர் இல்லத்தில் ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் டி.திருச்செல்வத்திடம் தனது விருப்ப மனுவை கொடுத்தார். தமிழ்நாடு காங்கிரஸ் சிறுபான்மைதுறை மாநில முதன்மை துணைத்தலைவர் எம் ஜவஹர் அலி, மாவட்டத்துணைத்தலைவர் கேஎஸ் செல்வம், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் நெசவாளர் அணி தலைவர் சி மாரிமுத்து, ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை துணைத்தலைவர் கே என் பாஷா, சேவா தளம் மாவட்ட துணைத் தலைவர் ராஜாஜிபுரம் பி குமரேசன், மாவட்ட நிர்வாகிகளான வீரப்பன் சத்திரம் குருசாமி, செங்கோடம்பள்ளம் பாஸ்கர், வாட்டர் சிவாஜி ஆகியோர் உடன் இருந்தனர்.



தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் மேற்கு மண்டல அளவிலான விளையாட்டுப் போட்டிகள் 2025, ஈரோடு வ.உ.சி. விளையாட்டு மைதானத்தில் உற்சாகமாகத் தொடங்கியது. "காக்கும் பணி! எங்கள் பணி!" என்ற தாரகமந்திரத்துடன்டிசம்பர்30மற்றும்31ஆகியஇரண்டுநாட்கள்நடைபெற்றஇந்தப்போட்டிகளின்தொடக்கவிழாவிற்கு, ஈரோடு மாவட்ட தீயணைப்பு அலுவலர் செந்தில்குமார் வரவேற்புரையாற்றினார். சேலம் மண்டல துணை இயக்குநரும், கோவைமேற்குமண்டலஇணைஇயக்குநருமானகல்யாணகுமார்தலைமைதாங்கிப்போட்டிகளைத்தொடங்கிவைத்தார். இவ்விழாவில் ஈரோடு மாவட்ட விளையாட்டு அலுவலர் சதீஸ்குமார் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வீரர்களை ஊக்கப்படுத்தி உரையாற்றினார். ஈரோடு, கோவை, சேலம் உள்ளிட்ட மேற்கு மண்டலத்தைச் சேர்ந்த தீயணைப்புத் துறை வீரர்கள்இந்தப்போட்டிகளில்மிகுந்தஆர்வத்துடன்பங்கேற்றனர்.இதனைத்தொடர்ந்துஈரோடுமாவட்டஉதவிஅலுவலர் கலைச்செல்வன் அணிவகுப்பினை வழிநடத்தி அதிகாரிகளுக்கு மரியாதை செலுத்தினர். வீரர்களின் உடல் தகுதி மற்றும் மன வலிமையை மேம்படுத்தும் நோக்கில் நடத்தப்படும் இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்றோர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. விழாவின் நிறைவாக ஈரோடு மாவட்ட உதவி மாவட்ட அலுவலர் கணேசன் நன்றியுரை வழங்கினார்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் 2026 ஆம் புத்தாண்டை முன்னிட்டு, காரைக்குடி கழனிவாசல் வ.உ.சி ரோடு பகுதியில் அமைந்துள்ள ரிவைவல் சர்ச் ஆஃப் காட் தேவாலயத்தில் மிக எளிமையான முறையில் புத்தாண்டு சிறப்பு ஆராதனை நடைபெற்றது. புதிய ஆண்டின் முதல் தருணத்தை ஆண்டவர் சமுகத்தில் துவங்கும் நோக்கில், இரவு 10 மணியளவில் ஆராதனை ஆரம்பமானது. தேவாலய மூப்பர்களின் வழிநடத்தலில் நடைபெற்ற நிகழ்வில் பாடல்கள், ஸ்தோத்திரத்துதிகள் மற்றும் ஜெபங்கள் இடம்பெற்றன. சரியாக நள்ளிரவு 12 மணிக்கு, அனைவரும் ஒன்றிணைந்து 2026 ஆம் ஆண்டை உற்சாகமாக வரவேற்றனர். இதனைத் தொடர்ந்து, தேவாலயத்தின் தலைமை போதகர் பாஸ்டர் எம். கிங்ஸ்லி அவர்கள் விசுவாசிகளுக்கு புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்தார். மேலும், ஒருவருக்கொருவர் புத்தாண்டு வாழ்த்துகளை பரிமாறிக் கொண்டு, ஆண்டவரின் வழிகாட்டுதலுடன் புதிய ஆண்டை எதிர்கொள்ள அனைவரும் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினர்.





அகில இந்திய விஸ்வகர்ம பேரவை மாநில பொதுச் செயலாளர் எம். மருதராஜ் கணேஷ் வழிகாட்டுதலின்படி ஈரோடு மாவட்ட அகில இந்திய விஸ்வகர்ம பேரவை மாவட்ட நிர்வாகிகள், மாவட்டத் தலைவர் ஆர்.ஈஸ்வரமூர்த்தி அவரது தலைமையில் ஈரோடு மாவட்ட ஆட்சியாளர் ச. கந்தசாமி சந்தித்து 5 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மனு அளித்தனர் . இந்த மனுவில் சிட்கோ மற்றும் சிப்காட் தொழில் அமைப்புகளில் உள்ளது போன்று தச்சு தொழிலாளர்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்ய வேண்டும் எனவும், அவர்களுக்கு உண்டான மின் வசதி மற்றும் மின்சார கட்டணம் ஆகியவை சலுகை வழங்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது .இரண்டாவதாக புஞ்சை புளியம்பட்டி காயிதே மில்லத் வீதியில் உள்ள தச்சு பயிலரங்கம் திறக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. மூன்றாவதாக இந்து சமய அறநிலை துறையில் உள்ள கோவில்களில் விஸ்வகர்ம சமுதாயத்தினர் உறுப்பினர் ஆக வேண்டும் எனவும் மனு அளிக்கப்பட்டது. நான்காவது நிலம் இல்லாத தச்சு மற்றும் பொற்கொள்ளர்களுக்கு அரசு நிலம் வீட்டு வசதி துறை மூலமாக ஒதுக்கீடு செய்து தர வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. ஆக ஐந்து கோரிக்கைகளை மாவட்ட ஆட்சியாளரிடம் மனுவாக வைக்கப்பட்டு அவரும் கனிவுடன் பரிசீலிக்க உள்ளதாக தெரிவித்துள்ளார். இந்த நிகழ்வில் மாவட்ட செயலாளர் ஆர். மூர்த்தி ,மாவட்ட பொருளாளர் சங்கர், மாவட்டத் துணைத் தலைவர் மூர்த்தி, புஞ்சைபுளியம்பட்டி நகர தலைவர் இளங்கோவன் புஞ்சைபுளியம்பட்டி, நகர செயலாளர் சத்தியமூர்த்தி, மாவட்ட இணைச்செயலாளர் ஆர் மகேஸ்வரன், துணைச்செயலாளர் சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.ஈரோடு மாவட்ட தொழில் மையம் பொது மேலாளரை சந்தித்து கலைஞர் கைவினை திட்டம் மற்றும் பெண்களுக்கான தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டம் ஆகியவை குறித்து விரைவாக கடனுதவி வழங்குவது குறித்து கோரிக்கை வைக்கப்பட்டது. இத்துடன் புத்தாண்டு வாழ்த்துக்களையும் அவர்களுக்கு தெரிவித்தனர்.ஈரோடு மாவட்ட அமைப்பு சாரா கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தின் சார்பில் வழங்கப்படும் நல வாரிய அடையாள அட்டை அகில இந்திய விஸ்வகர்ம பேரவை நிர்வாகிகள் வைத்துள்ளனர். அதில் ஓய்வு பெற்ற 60 வயதிற்கு மேற்பட்ட தச்சுப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் ரூபாய் 1200 லிருந்து ரூபாய் 1500 உயர்த்தி வழங்க வேண்டும் என கட்டுமான தொழிலாளர் நல வாரித்திற்கு கோரிக்கை மனுவை ஈரோடு மாவட்ட அகில இந்திய விஸ்வகர்ம பேரவை சார்பாக தெரிவித்தனர்.

# ஈரோட்டில் கிரைம் கண்ட்ரோல் சமிதி சார்பில் குற்றத் தடுப்பு உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி



ஈரோட்டில் ஆங்கிலப் புத்தாண்டு பிறப்பை முன்னிட்டு ஈரோட்டில் கிரைம் கண்ட்ரோல் சமிதி சார்பில் குற்றத் தடுப்பு விழிப்புணர்வு மற்றும் புதிய உறுப்பி-னர்கள் உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றது. தமிழகத் தலைவர் அக்-பர் அலி அவர்களின் ஆலோசனையின்படி நடைபெற்ற இந்நிகழ்ச்-சிக்கு, மாநில நிர்வாகி ராஜேந்திரன் தலைமை தாங்கினார். முன்னதாக ஞானசேகர் வரவேற்பு-ரையாற்றினார்.

இவ்விழாவிற்கு வாசு-தேவன்,வழக்கறிஞர்கள் பிஜு மற்றும் ஐஸ்வர்யா ஆகியோர் முன்னிலை வகித்துச் சிறப்பித்த னர்.

நிகழ்ச்சியில் சமிதி-யின் தலைவர் அக்பர் அலி, தொழில் சங்கத் தலைவர் பாலசுப்பிரம-ணியம் மற்றும் சமூக ஆர்வலர் ஹர்ஷத்

ஆகியோர் சிறப்புரை யாற்றினர். அவர்கள் தங்களது உரையில்,குற்-றமில்லாத சமுதாயத்தை உருவாக்குவதில் பொது-மக்களின் பொறுப்பு மற்-றும் விழிப்புணர்வு குறித்து விரிவாக எடுத்-துரைத்தனர். இதனைத் தொடர்ந்து, அமைப்பில் புதிதாக இணைந்த உறுப்பினர்கள் குற்றத் தடுப்பு நடவடிக்கைக-ளில் தங்களை ஈடுபடுத்-திக்கொள்வதாக உறுதி-மொழி ஏற்றுக்கொண்டனர். விழாவின் நிறைவாக அனைவருக்கும் அசைவ விருந்து வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பா-டுகளைச் செய்திருந்த மாவட்ட நிர்வாகி சுல்-தான் நன்றியுரை வழங்-கினார்.



தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டாரத்திற்குட்பட்ட மேல்மங்கலம் ஊராட்சியில், ஊராட்சி செயலாளர் ஆர். முருகன் முன்னிலையில், உசிலம்பட்டி கிருஷ்ணா வேளாண் தொழில்நுட்பக் கல்லூரியில் பயிலும் இளங்கலை மாணவர்கள் மு. கார்த்திகேயன், சேவுகமூர்த்தி, அருண்மொழி, மாதவகிருஷ்ணன், திலக், பிரவீன் மற்றும் அன்புமணி ஆகியோர் இணைந்து, Participatory Rural Appraisal (PRA) முறையின் கீழ், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களுக்காக ஊரக அமைப்பு மற்றும் வேளாண்மை சார்ந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர். இந்நிகழ்ச்சியின் போது, வழக்கமான வரைபடம், வென் வரைபடம், ஊரக வளங்கள் வரைபடம், இயக்கம் வரைபடம் உள்ளிட்ட பல்வேறு PRA கருவிகள் பயன்படுத்தப்பட்டு, விவசாயம் மற்றும் ஊரக வளர்ச்சி தொடர்பான தகவல்கள் பொதுமக்களிடையே தெளிவாக எடுத்துரைக்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் பொதுமக்கள் ஆர்வமுடன் பங்கேற்று பயனடைந்தனர்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.